# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 மார்ச் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/06)**

அ. மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்கத்தின் (NADA) பிரதான நடன அரங்கத்தினை நவீனமயமாக்கல் மற்றும் சிறிய கலையரங்க மண்டபங்களை முழுமையான அரங்கங்களாக அமைப்பது தொடர்பாக பிரேரணை ஒன்று சபையில் நிறைவேற்றப்பட்டு உள்ளது என்பதனை அறிவீர்களா ?

ஆ. இது தொடர்பாக வரவு செலவுத் திட்ட விஷேட பிரேரணை - 2018 ஆகவும் முதலமைச்சருக்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

இ. 2018 ஆம் ஆண்டின் அபிவிருத்தி விடயமாக இது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

**VI.** வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

**VII.** அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

**VIII.** தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

**IX.** சபை நடவடிக்கை - I

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை** :

இன்றைய தின நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கை விடயத்தின் கீழ் காணப்படும் இலக்கம் (01) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்காக விதி இலக்கங்கள் 52(5), 57(1), 57(4) மற்றும் 57(5) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடை ஒன்றும் ஏற்படக் கூடாது எனக் கருதி செயற்பட வேண்டும்."

**சபை நடவடிக்கை - II**

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை** :

இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்."

**X.** தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

இலங்கையானது 2500 வருடங்களை விட பழமை வாய்ந்த வரலாற்றைக் கொண்ட நாடொன்று என கூறிக் கொண்டாலும், எங்களின் பின்னர் வரும் பரம்பரையினருக்கு அபிமானம் மிக்கதானதொன்றானது என வர்ணிக்கக் கூடிய எதிர்காலம் ஒன்று ஏற்படக் கூடியமுறையில் தற்போதைய அரசியல் தலைவர்களான எம்பால் நாட்டினைக் கட்டியெழுப்புவது மேற்கொள்ளாத விடத்து அது எங்களது பொறுப்பினை தட்டிக்

களித்ததாகவே ஏற்படும். எனவே தேசிய செல்வம், அதிகாரம் மற்றும் எங்கள் யாவரினதும் இயலுமையை உச்ச அளவில் நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தி பலம் மிக்க பொருளாதாரத்தை கட்டியெழுப்பி ஒவ்வொரு முறையும் ஏற்படும் வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை விபத்துக்கள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை முன்னரே அறிந்து தேசிய கொள்கை ஒன்றினூடாக இந் நாட்டின் இன, சமய, சமூக இயக்கங்களை ஒன்று சேர்த்து நல்லிணக்கத்தினுடனான ஒரு வழியாக இலங்கையின் எதிர்காலத்தினை பாதுகாத்துக் கொண்டு விரைவான முன்னேற்றமொன்றினை நோக்கி இந் நாட்டினை கொண்டு செல்ல எல்லா மக்கள் பிரதிநிதிகளும் முன்னணி ஒன்றாக வேண்டும் எனவும், அதற்கான வேலைத் திட்டத்தினை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)17/11)**

**02. கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

இந் நாட்டின் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சட்டத்திற்கு இணங்க நடைமுறைப் படுத்தப்படும் ஏதாவது நீதி மன்றம் ஒன்றின் நீதிமன்ற அதிகார பிரதேசம் நீதிமன்றங்கள் ஒழுங்கு படுத்தல் சட்டத்தின் இரண்டாவது (2) பிரிவிற்கு இணங்க நீதிச் சேவை ஆணைக்குழுச் சபை மற்றும் உயர் நீதிமன்ற தலைவரிடம் வினவி நீதி அமைச்சரினால் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும். அவ்வாறான நீதி ஏற்பாடுகள் காணப்பட்ட போதும் தற்போது காணப்படும் நீதி மன்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் முறை மற்றும் அவற்றினால் ஏற்படும் பிரயோக ரீதியான பிரச்சினை தொடர்பாக ஒழுங்கான தெளிவு உள்ள மேற்கூறப்பட்ட நபர்கள் மற்றும் தாபனங்களிடமிருந்து தொடர்ச்சியாக பெறப்படுகின்றது. எனினும் அண்மையில் நீதிமன்ற அதிகார எல்லைக்குரிய அதிகார பிரசேத்தினை தீர்மானிக்கும் போது ஒழுங்கான முறை ஒன்றினை கடைபிடிக்காது நடவடிக்கை எடுத்த சந்தர்ப்பங்களைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே நீதி மன்றத் துறை தொடர்பாக மக்களிடம் காணப்படும் நம்பிக்கை அதிகரிக்குமாறு அந்த எல்லா அதிகார எல்லைகளையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி ஏதாவது தவறு ஒன்று நிகழ்ந்திருந்தால் அத் தவறினை சட்டரீதியான அமைப்பினூடாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)17/12)**

## XI. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர்** (மே.மா)

**பிரேரணை** :

**2018 ஆம் ஆண்டின் குறை நிரப்பு மதிப்பீடு - 01**

2018 ஆம் ஆண்டிற்காக மேல் மாகாண சபையின் அமைச்சுக்களின் கீழே காணப்படும் தேவைகளுக்காக அதாவது,

- மாகாணத்தினுள் வேலைகள் நிறைவு செய்யப்படாத பாடசாலைக் கட்டடங்களில் வேலைகளை நிறைவு செய்வதற்கு, அத்தியாவசிய பாடசாலைகளின் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு அத்துடன் கல்வித்துறையின் ஏனைய நிர்மாணங்களுக்காக ஒதுக்கீடுகளை ஒதுக்குவதற்கு,

- மாகாண வைத்தியசாலைகளின் அத்தியாவசிய கட்டங்களை நிர்மாணிப்பதற்கு, பழுதுபார்ப்பு மற்றும் நவீனமயப்படுத்துவதற்கு வைத்திய உபகரணங்களை கொள்வனவு செய்ய மற்றும் வைத்திய துறையின் அபிவிருத்திக்கு தேவையான செலவுகளை மேற்கொள்வதற்காக ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்,

- மாகாண சபையின் ஏனைய நிறுவனங்களின் கட்டடங்களின் வேலைகளை பூர்த்தி செய்தல், அத்தியாவசிய கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய நிர்மாணங்களுக்காக ஏற்பாட்டினை ஒதுக்குவது ஆகிய தேவைகளுக்காக,

2018 ஆம் ஆண்டிற்காக குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியுள்ள படியாலும் அதற்குத் தேவையான ரூபா மூன்று பில்லியன் முப்பத்தைந்து மில்லியன் ஐம்பத்து ஐயாயிரமான (ரூ.3,035,055,000/-) ஆகிய மொத்த ஏற்பாட்டினை தற்போது திறைசேரி ரிப்போ இன் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதியில் ஒரு பகுதியினைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக தீர்ப்பதற்காக எதிர்ப்பார்த்து தயாரிக்கப்பட்டுள்ள 2018 குறைநிரப்பு மதிப்பீடு - 01 இனை அங்கீகரிக்க வேண்டும்.

2018 குறைநிரப்பு மதிப்பீடு 01 மற்றும் அதற்குரிய குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் செலவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உரிய செயற்றிட்ட பிரேரணைகளின் பிரதிகள் கௌரவ உறுப்பினர்களுக்கு இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**02.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**2018 குறைநிரப்பு மதிப்பீடு - 01 க்கு உரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்**

2018 ஆம் ஆண்டிற்காக குறைநிரப்பு மதிப்பீடு 01 தேவையான ரூபா மூன்று பில்லியன் முப்பத்தைந்து மில்லியன் ஐம்பத்து ஐயாயிரமான (ரூ. 3,035,055,000/-) ஆகிய நிதியை மேல் மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தினால் மானியமாகவோ வேறு முறையில் கிடைக்கப் பெறும் நிதியினை அந்த நிதியத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கும் 2018 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும்.

**03.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 07 ஆம் பிரிவிற்கு இணங்க மாகாண சபை முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் - 2017 ஆம் ஆண்டு**

"முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் - 2017 என்ற பெயர் கொண்ட ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள படி முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்தும் போது 2016 ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுதுள்ள படியாலும்,

அத் திருத்தங்களை மேற்கொள்வதற்காக மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் சபையின் அங்கீகாரத்தின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள படியாலும் அந்த ஆவணத்தில் காணப்படுமாறு ஒவ்வொரு முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துவதை இந்த மேல் மாகாண மாகாண சபை அங்கீகரிக்கின்றது.

**04.** **கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக சேவைகள், சமூக நலன்புரி நன்நடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் மற்றும் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**புதிய நடவடிக்கை ஒழுங்கு விதி**

"2018 மார்ச் மாதம் 20 ஆந் திகதி அதாவது இன்றைய தினம் 2018 ஜனவரி 09 ஆந் திகதி உத்தியோகபூர்வ அறிக்கையுடன் இணைப்பு ஒன்றாக சமர்ப்பிக்கப்படும், 1997 ஒக்டோபர் 09 ஆந் திகதி நடை முறைக்கு வந்த விதிப் புத்தகத்திற்கு முனவைக்கப்பட்ட எல்லா திருத்தங்களும் உள்ளடங்கலாக 2017 நவம்பர் மாதம் 07 ஆந் திகதி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, 2017 நவம்பர் மாதம் 14 ஆந் திகதி மற்றும் 2018 ஜனவரி 09 ஆகிய தினங்களில் கலந்துரையாடி 2018 ஜனவரி மாதம் 09 ஆந் திகதி சபையில் நிறைவேற்றப்பட்ட புதிய நடவடிக்கை ஒழுங்கு விதிப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லா விதிகளும் 2018 மே மாதம் 08 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வர வேண்டும்.

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.03.07** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.